DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 30/2024 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W.2 P.W.1 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுஜாதா | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : மணிகண்டன் | ஜாதி | |
| கிராமம் | : | இனம் | |
| தாலூக்கா | : | வயது | |
| Mail ID | : | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 09.03.2026.

**எதிரி ஆஜரின்மைக்காக மனு அனுமதிக்கப்பட்டது**

**முதல் விசாரணை**

1. நான் திருப்பூரில் வசித்து வருகிறேன். பனியன் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். சொந்த ஊர் தேனி மாவட்டம் வத்தலக்குண்டு ஆகும். நான் மணிகண்டன் எனப்வரை திருமணம் செய்து 13 வருடத்திற்கு மேல் ஆகிறது. நானும் அவரும் பிரிந்து 11 வருடம் ஆகிறது. எனக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ள நிலையில் தற்சமயம் எனது மகன் இ றந்து விட்டான். நான் பனியன் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். என்னுடன் நாகலட்சுமி என்பவர் பணிபுரிந்து வந்தார் அவர் மூலம் பானுமதி என்பவர் பழக்கம் ஆனார்.அவர் 300 ரூபாய்க்கு ஏன் கஷ்டப்படுகிறாய் என்னுடன் வா தினமும் ரூ . 500 தருகிறேன் என்று அடிக்கடி பானுமதி எனக்கு போன் செய்வார். நான் இரண்டு மூன்று முறை பானுமதியின் வெஞ்சமடை வீட்டிற்கு சென்று வந்தேன். அங்கு சென்ற போது அங்கு ஆணகள் வருவார்கள் அவர்களிடம் என்ன பேசினார்கள் என்று தெரியாது பணத்தை வாங்கிக் கொண்டு என்னை ரூமிற்குள்

அனுப்பி வைத்தார்கள்.

2. கடந்த 11.12.2023 ம் தேதியின்று காலை 7.00 மணிக்கு எனக்கு போன் செய்து இரண்டு மூன்று ஆண்கள் வருகிறார்கள். நீ வர வேண்டும் என்று சொன்னார்கள் நான் 11.30 மணிக்கு வந்தேன். நாகலட்சுமி அங்க இருந்தார். இரண்டு மூன்று பேர் ஆண்கள் இருந்தார்கள். முதலில் நாகலட்சுமியை அனுப்பி வைத்தார்கள். அதன் பிறகு மற்றொரு ஆண் நபருடன் என்னை அனுப்பி வைத்தார்கள். அந்த சமயத்தில் போலிசார் அங்கு வந்து என்னை பிடித்து விட்டார்கள் . நான் பாதிக்கப்பட்டவர் என்பதால் என்னை விசாரித்து அனுப்பி விட்டார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. ஒழுக்க கேடான விபச்சார தொழில் எதுவும் செய்யவில்லை என்றால் என் கஷ்டத்திற்கு நான் செய்தேன். போலிசார் விசாரித்தார்களா என்றால் பிடித்த போது விசாரித்தார்கள். இந்த விபரத்தை போலிசாரிடம் நீங்கள் சொன்னீர்களா என்றால் ஆமாம்.
2. உடுமலைப்பேட்டையில் வெஞ்சமடை எங்குள்ளது என்று தெரியுமா என்றால் ஆட்டோவில் நாகலட்சுமி அழைத்துச் சென்றார் . உடுமலைப்பேட்டையில் பழனி ரோட்டில் கிழமேல் ரோட்டில் தென்புறமாக உள்ளது என்றால் சரிதான். ரோட்டில் இருந்து பின்புறமாக ரோடு போகிறது என்றால் ஆமாம், நாங்கள் மண் ரோடு வழியாக சென்றோம். அந்த ரோட்டில் தான் அன்றைய தினம் சென்றிர்கள் என்றால் ஆமாம்.
3. உங்களுக்கு நேரடியாக பானுமதி யார் என்று தெரியாது என்றாலும் ஆமாம். பானுமதியின் வீட்டு விலாசம், வீடு பற்றி தெரியாது என்றால் ஆமாம். பழனி ரோட்டில் தென் வடலாக சென்றதாக சொல்லயுள்ள நிலையில் எவ்வளவு தூரம் சென்றிர்கள் என்றால் 1 கிமீ சென்றோம். ரயில்வே கேட்டை தாண்டி சென்றீர்களா என்றால் ஞாபகம் இல்லை. வழக்கு சம்பந்தமாக யாருடைய போன் நெம்பரும் தெரியாது என்றால் சரிதான். இல்லை நாகலட்சுமிபோன் நம்பர் தெரியும் பானுமதி போன் நம்பர் தெரியாது.
4. வெஞ்சமடையில் குறிப்பிட்டு அவர்கள் வீடு எங்கு உள்ளது என தெரியாது என்றால் ஆமாம். நீங்கள் 2-3 முறை வெஞ்சமடை போனதாக தவறாக செய்கிறீர்கள் என்றாலும் வெஞ்சமடையில் அவர்கள் வீடு இல்லை என்றாலும் நீங்கள் பானுமதி வீட்டிற்கு போகாததால் அவரது வீடு எங்கு உள்ளது என உங்களால் சொல்ல இயலவில்லை என்றாலும் அவரது வீட்டிற்கு இருபுறமும் வாசல்

உள்ளது, நாங்கள் பின் வாசல் வழியாக மண் சாலை செல்கிறது. அந்த வழியாக சென்றோம். நீங்கள் அவர்களது வீட்டிற்கு சென்றபோது 4–5 நபர்கள் இருந்ததாக வழக்குக்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. உங்களுடைய தவறான உறவில் வந்த வருமானத்தை அவர்களுக்கு கொடுக்கவில்லை என்றால் அவர்கள்தான்எனக்கு 500 ரூபாய் கொடுப்பார்கள். அவர்கள் பணம் கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றாலும் சம்பவம் நடந்த காலகட்டத்தில் அவரது மகளுக்கு வீட்டில் திருமணம் வைத்திருந்தார்கள் என்றாலும் அவரது வீட்டில் அவரது மகளும் மகனும் இருந்தார்கள் என்றாலும் உங்களை அவர்கள் தவறான உறவுக்கு பயன்படுத்தவில்லை என்றாலும் அவர் வீட்டிற்கு நீங்கள் எந்த காலத்திலும் செல்லவில்லை என்றாலும் சரியல்ல.

5. நீங்கள் நாகலட்சுமி என்பவருடன் தவறான வழியில் சென்று வந்திர்கள் என்றாலும் நாகலட்சுமிக்கும் ஒரு பைனான்ஸ் காரருக்கும தொடர்பு இருந்து வந்தது என்றாலும் அந்த பைனான்ஸ்காரருக்கும் வீட்டு வேலை சம்பந்தமாக கருத்து வேறுபாடு தகராறு இருந்தது என்றாலும் அதை பயன்படுத்தி அவர் மீது பொய்யான வழக்கு போட்டுள்ளார்கள் என்றாலும் அதற்கு நீங்கள் உடனடியாக உள்ளீர்கள் என்றாலும் போலிசார் புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய்யான வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல பானுமதி யார் என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala , B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.